JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OFJUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | **25/2020** |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | |
| Deposition of witness for | **P.W. 5** | Prosecution /Defence / Court | |
| Name | தட்சிணாமூர்த்தி | Caste | |
| Father's Name | **Meganathan** | Calling | |
| Village | **Annathanapatti** | Religion | |
| Taluk | **Salem** | Age | |

**Accused present**.

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of **Date 29.04.2025.**

**முதல் விசாரணை**

**1)** நான் மேற்கண்ட முகவரியில் விபத்து சமயத்தில் குடியிருந்து கொண்டு தற்போது கோயம்புத்தூரில் வேலை செய்து வருகிறேன். தற்போது ஈரோட்டில் குடியிருந்து வருகிறேன். விபத்தில் காயம் பட்டு இறந்து போன மேகநாதன் என்னுடைய தந்தை ஆவார். 05.03.2016 ம் தேதி இரவு 8.15 மணிக்கு என் தந்தைக்கு வாவிக்கடை அருகே கார் மோதி விபத்து ஏற்பட்டு விட்டது என போன் மூலம் தகவல் கிடைத்து நான் என் தந்தையை ஈரோடு அரசு மருத்துவமனையில் பார்த்த போது என் தந்தை இறந்து போயிருந்தார். மறுநாள் பெருந்துறை காவல் நிலைய காவல் ஆய்வாளர் அவர்கள் பிரேத விசாரணை மேற்கண்ட போது நான் உடனிருந்தேன். எனக்கு தெரிந்த விவரங்களை கூறினேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**1)** விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். விபத்து பற்றி எனக்கு யார் தகவல் தெரிவித்தார்கள் என்றால் போன் மூலமாக எனக்கு தகவல் கொடுத்தார்கள். அதன் பின்னிட்டு நான் அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். இந்த விபத்தை நான் நேரில் பார்க்காததால் இந்த விபத்தை ஏற்படுத்தியது யார் என்று

**என்னால் சொல்ல முடியாது என்றால் சரிதான். விபத்தில் இழப்பீடு கேட்டு மனு தாக்கல் செய்து இழப்பீடு பெற்றுள்ளோம் என்றால் சரிதான்.**

**மறு விசாரணை இல்லை**

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை